சி.சி. 188/2023.
அ.சா.5 கேசவன்
த/பெ. கூல்ச்சாமி
25.07.2025
சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜரானார். கு.வி.மு.ச. பிரிவு 311–ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் வைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை.

மங்கையர்கரசி வீடு கிழக்கு பார்த்த வாசல் என்றால் சரிதான். மேற்படி வாசலுக்கு முன்பு வைத்து போலிசார் விசாரித்தார்களா என்றால் இல்லை வாசல் அருகில் வைத்து விசாரித்தார்கள். வாசலுக்கு தெற்கு பக்கமா என்றால் ஞாபகமில்லை. மங்கையர்கரசிக்கு நான் மாமா மகனா என்றால் இல்லை. உறவுமுறை எதுவும் கிடையாது. அசா3 ஆக சாட்சியம் அளித்துள்ள முத்துராஜா என் உடன்பிறந்த சகோதரரா என்றால் இல்லை. வாசாஆ 3 ன் அப்பா கூல்ச்சாமி வேறு. எனது அப்பா கூல்ச்சாமி வேறு நபர்கள் ஆவார்கள். எனது அம்மா பெயர் காந்திமதி ஆவார். முத்துராஜா அம்மா பெயர் காந்தி மதி என்றால் எனக்கு தெரியாது. மங்கையர்கரசிக்கு நான் மாமா மகன் என்றாலும் அதனால்தான் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிப்பதற்காக நான் என் உடன்பிறந்த முத்துராஜாவை உடன் பிறக்கவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னை போலிசார் விசாரிக்கவில்லை என்றாலும் சம்பவஇடம் பற்றி எனக்கு தெரியாது என்றாலும் சரியல்ல. அதனால் என் சாட்சியம் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல.

மறு விசாரணை –

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.